


**06. 07. 2026**

தலைப்புச் செய்திகள்

1. இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளுடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படும் என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி கூறியுள்ளார்.

2. தமிழகத்தில் பட்ஜெட்டிற்கு முந்தைய பேச்சுவார்த்தைகளின் ஒருபகுதியாக முதலமைச்சர் திரு. விஜய், உயர்கல்வித் துறையினருடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

3. குடியிருப்பு பகுதிகளில் வன விலங்குகள் நுழைவதை தடுக்க வெளிநாட்டு தொழில்நுட்பங்கள் கையாளப்படும் என்று மாநில வனத்துறை அமைச்சர் திரு. ரஞ்சித் குமார் தெரிவித்துள்ளார்.

4. தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு நிலைமை கேள்விக் குறியாகி உள்ளதாக பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

5. கர்நாடக அரசு காவிரியில் உடனடியாக தண்ணீர் திறந்துவிட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

பிரதமர்

இந்தோனேஷியா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து நாடுகளுக்கு 6 நாள் அரசுமுறை பயணமாக தாம் செல்வதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

முதற்கட்டமாக இந்தோனேஷியா நாட்டிற்கு புறப்படுவதற்கு முன்னர் பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில் அந்நாட்டு அதிபர் பிரபாவோ சுபியாண்டோவின் அழைப்பை ஏற்று அங்கு செல்ல இருப்பதாகவும், நாளைமறுநாள் வரை விரிவான இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள இருப்பதாகவும் கூறினார்.

அங்குள்ள இந்திய வம்சாவளியினரை சந்தித்து பேச இருப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

3 நாடுகளின் தலைவர்களுடன் பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருதரப்பு ஒத்துழைப்பு மேம்படுத்துவது தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபடவுள்ளதாகவும் பிரதமர் எடுத்துரைத்தார்.

இந்தோனேஷியா பயணத்தை முடித்துக்கொண்டு நாளை மறுநாள் ஆஸ்திரேலியா புறப்படும் பிரதமர் அதனைத் தொடர்ந்து நியூசிலாந்து செல்லவுள்ளார்.

❖❖❖❖❖❖❖

அமித்ஷா

நாட்டில் கூட்டுறவுத்துறை மூலம் லட்சக்கணக்கான மக்களின் வாழ்க்கையில் ஆக்கப்பூர்வமான மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

கூட்டுறவுத்துறை அமைச்சகத்தின் 5-ம் ஆண்டு நிறுவன தினத்தை ஒட்டி இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உரையாற்றிய அமைச்சர், இத்துறையுடன் இணைக்கப்பட்டுள்ள 30 கோடி மக்களுக்கு இத்தினம் இன்றியமையாதது என குறிப்பிட்டார்.

கூட்டுறவுத் துறையை நவீனப்படுத்தி வெளிப்படையான நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய செயல்பாடுகள் மேற்கொள்ளப் பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

கூட்டுறவு நிறுவனங்களை தரவரிசைப் படுத்தும் நெறிமுறைகளை மத்திய அரசு தொடங்கியதை அடுத்து ஒவ்வொரு துறையிலும் சிறப்பாக செயல்படும் 5 கூட்டுறவு அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படும் என்று கூறினார்.

தேசிய கூட்டுறவு குழுவின் மூலம் விதை உற்பத்தி பிரிவு நாட்டின் அரசு சாரா மிகப்பெரிய உற்பத்தி அமைப்பாக வருங்காலங்களில் உருவெடுக்கும் என்று கூறினார்.

இதன்மூலம் விவசாயிகள் பெரிதும் பயனடைவார்கள் என்றும் தெரிவித்தார்.

❖❖❖❖❖❖❖

ஆயுஷ்மான் பாரத்

நாட்டில் 104 கோடி சுகாதார பதிவுகள் 93 கோடி ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கீட்டின் கீழ் இணைக்கப் பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

மின்னணு பொது சுகாதார சுற்றுச்சூழல் பாதையில் இது ஒரு ஆக்கப்பூர்வமான முன்னேற்றம் என்றும் அரசு கூறியுள்ளது.

நாட்டின் சுகாதார கட்டமைப்பின் கீழ் ஆதார் தனிநபர் அடையாள அட்டையை போல Abha எனப்படும் ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கும், தனிநபர்களை இணைப்பதாக அரசு கூறியுள்ளது.

இதன் மூலம் அனைத்து சுகாதார சேவைகளுக்கும் வழிகோலப்பட்டுள்ளது.

ஆயுஷ்மான் பாரத் டிஜிட்டல் இயக்க இணைப்பின் கீழ் நோயாளிகள் அனைவரும் பயன்பெறும் வகையில் நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் Abha சுகாதார பதிவை ஏற்படுத்த அரசு செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

தமிழகத்தில் நடப்பு நிதியாண்டிற்கான நிதிநிலை அறிக்கை விரைவில் தாக்கல் செய்யப்படவுள்ள நிலையில் முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய், உயர்கல்வித் துறையினருடன் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. விஸ்வநாதன் மற்றும் இத்துறையின் உயரதிகாரிகளுடன் சென்னை தலைமை

செயலகத்தில் இன்று ஆய்வு மேற்கொண்ட அவர், இத்துறை சார்ந்த திட்டங்கள் குறித்து விவாதித்தார்.

காலிப்பணியிடங்கள், பல்கலைக் கழகங்களில் துணை வேந்தர் நியமனம் உள்ளிட்டவை குறித்து இதில் ஆலோசிக்கப் பட்டதாக தெரிகிறது.

இன்று பிற்பகல் நடைபெறும் கூட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகளுடன் முதலமைச்சர் ஆய்வு மேற்கொள்கிறார்.

நெம்மேலி கடல்நீரை குடிநீராக்கும் திட்டப்பணிகளை இன்றுமாலை முதலமைச்சர் ஆய்வுசெய்ய உள்ளார்.

❖❖❖❖❖❖❖

ரஞ்சித் குமார்

தமிழ்நாட்டில் குடியிருப்பு பகுதிகளில் வனவிலங்குகள் நுழைவதை தடுக்க வெளிநாட்டு தொழில்நுட்பங்கள் கையாளப்படும் என்று மாநில வனத்துறை அமைச்சர் திரு. ரஞ்சித் குமார் தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மனித - விலங்கு மோதலை தடுக்க நவீன தொழில்நுட்பங்கள் அறிமுகம் செய்யவுள்ளதாக கூறினார்.

முன்னதாக பழைய ரயில் நிலையம் அருகே போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வுகாணும் வகையில் ஆய்வு மேற்கொண்டார்.

❖❖❖❖❖❖❖

விஜய் பாலாஜி

தமிழக நெசவாளர்களின் பிரச்சனைக்கு விரைவில் தீர்வு காணப்படும் என்று மாநில கைத்தறி துணிநூல் அமைச்சர் திரு. விஜய் பாலாஜி தெரிவித்துள்ளார்.

காஞ்சிபுரம் பேரறிஞர் அண்ணா கைத்தறி பட்டுப் பூங்காவை இன்று ஆய்வு செய்த பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், போலி பட்டுப் புடவை புழக்கம் மற்றும் இடைத்தரகர்களை தடுக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

❖❖❖❖❖❖❖

விருது

முதலமைச்சர் மாநில இளையோர் விருதுக்கு விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் வரும் 13-ம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

தகுதியுடையவர்கள் இணையதளம் மூலம் இதற்கு விண்ணப்பிக்கலாம்

❖❖❖❖❖❖❖

நயினார் நாகேந்திரன்

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கி நிலைமை கேள்வி குறியாகி உள்ளதாக பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

திண்டிவனத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், முந்தைய தி.மு.க. ஆட்சிக்கும், தற்போதைய த.வெ.க. ஆட்சிக்கும் வேறுபாடு இல்லை என்றும் கூறினார்.

த.வெ.க ஆட்சியில் குதிரைபேரம் நடைபெறுவதாக கூறப்படும் நிலையில், முதலமைச்சர் அதை தடுத்து நிறுத்த வேண்டுமென்று குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

வீரபாண்டியன்

கர்நாடக அரசு, காவிரியில் உடனடியாக தண்ணீர் திறந்துவிட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்டும் கர்நாடக அரசின் முயற்சி நாட்டின் ஒருமைப்பாட்டை கேள்விக்குறியாக்கிவிடும் என்றும் குறைகூறினார்.

தமிழகம் முழுவதும் குடிநீர் பிரச்சனை மக்களை வாட்டி வதைப்பதாக கவலை தெரிவித்தார்.

பெட்ரோல் டீசல் விலை உயர்வை தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டியுள்ளார்.

விவசாய கடனை தமிழக அரசு முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்று கோரிய அவர், தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு பாதுகாப்பில் எந்த சமரசத்திற்கும் இடமளிக்கக் கூடாது என்று வலியுறுத்தினார்.

மதுரையில் ஆய்வுக்கூட்டம் மேற்கொண்ட தமிழக ஆளுநரின் செயல் நாட்டின் இறையாண்மைக்கு எதிரானது என்றார்.

நாட்டின் ஜனநாயகத்தை பாதுகாக்க மக்கள் இடது சாரிகளை ஆதரிக்க வேண்டுமென்றும் திரு. வீரபாண்டியன் கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖❖

எடப்பாடி கே. பழனிச்சாமி

சட்டப்பேரவை தேர்தல் தோல்வி, கட்சியின் வளர்ச்சிப் பணிகள் குறித்து அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி தஞ்சை மாவட்ட கட்சி நிர்வாகிகளுடன் சென்னையில் அவர் ஆலோசனை மேற்கொண்டார்.

அப்போது பேசிய அவர், அஇஅதிமுக-வை தகர்க்கும் எண்ணம் நிறைவேறாது என்றும், சுய லாபத்திற்காக சிலர் கட்சியிலிருந்து வெளியேறுவதாக குற்றம் சாட்டினார்.

திருச்சி, ஈரோடு, நெல்லை உள்ளிட்ட பல்வேறு மாவட்ட நிர்வாகிகளுடன் இன்றுமுதல் வரும் 9-ம் தேதி வரை ஆலோசனை மேற்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖

இருவரி

அரியலூர் மாவட்டத்தில் சட்டம் ஒழுங்கு பணிகள் தொடர்பான வாராந்திர ஆய்வுக்கூட்டம் ஆட்சித் தலைவர் திருமதி. மிருணாளினி தலைமையில் இன்று நடைபெற்றது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் பள்ளி வாகனங்களின் தரம் மற்றும் பாதுகாப்பு குறித்து உரிய ஆய்வு மேற்கொள்ளுமாறு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சினேகா பிரியா அறிவுறுத்தி உள்ளார்.

❖❖❖❖❖❖❖

நாகை

நாகூர் கடற்கரையில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மாபெரும் தூய்மைப் பணிகளை நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பிரவீன்குமார் இன்று தொடங்கி வைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

இருவரி

தமிழக கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளின் பயிர்க்கடன் முழுவதையும் மாநில அரசு தள்ளுபடி செய்ய வேண்டும் என வலியுறுத்தி திருவாரூர் மாவட்ட பி.ஜே.பி. விவசாய அணி சார்பில் மன்னார்குடியில் இன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகத்தில் நேரக்கட்டுப்பாட்டை மீறி கடலுக்குள் செல்லும் மீனவர்களை கண்டித்து, பிற மீனவர்கள் இன்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

திருவண்ணாமலை மாவட்டம் போளூர் அருகே 3 மாதங்களாக குடிநீர் வழங்காததை கண்டித்து நம்மியந்தல் கிராம மக்கள் காலிக்குடங்களுடன் இன்று சாலைமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக போளூர் செங்கம் சாலையில் ஒருமணி நேரத்திற்கும் மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖

குற்றாலம்

கோவை குற்றால அருவியில் நீர்வரத்து அதிகரித்து காணப்படுவதால் சுற்றுலா பயணிகளுக்கான தடை 4-வது நாளாக இன்றும் தொடர்கிறது என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

கோவில்

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவிலில் ரோப்கார் இணையதள முன்பதிவு பயணம் இன்றுமுதல் பயன்பாட்டிற்கு வந்துள்ளதாக எமது திண்டுக்கல் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

கால்பந்து

FIFA உலகக்கோப்பை கால்பந்து காலிறுதி ஆட்டங்களுக்கு இதுவரை மொராக்கோ, பிரான்ஸ், நார்வே, இங்கிலாந்து அணிகள் முன்னேறியுள்ளன.

இன்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டங்களில் நார்வே – பிரேசிலையும், இங்கிலாந்து – மெக்சிக்கோவையும் வென்றன.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.